தினமணி மாணவர் பதிப்பு

# உலகே உன் பெயரை உச்சரிக்கும்

“நீ ஸ்பெல்லிங் போட்டியிலே கலந்துக்கத் தயார் பண்ணணும்னு சொன்னியே... இந்த அண்ணா பேரை, சரியா ஒவ்வொரு எழுத்தாச் சொல்லு பார்க்கலாம்” என்றான் அதிபன். அவனுக்குப் பதின்மூன்று வயது.

நிலா... அவளுக்கு பத்து வயது தான் ஆகிறது. அன்றைய ஆங்கில நாளிதழைக் கையில் வைத்துக்கொண்டு பேசிக்கொண்டு இருந்தனர்.

“PRAGNANANDA... சரியா?” என்றாள் நிலா.

“நல்ல முயற்சி. ஆனா, அவர் தன்னோட பேர்ல ரெண்டு G, ரெண்டு A வச்சிருக்கார். பிராப்பர் நவுன்களுக்கு உச்சரிப்பின்படி சரியான ஸ்பெல்லிங் வர்றதில்லை” என்றான் அதிபன். PRAGGNANANDHAA என்று சரியாகச் சொல்லித் தந்தான்.

“சரியான ஆளைப் பத்திதான் காலையில பேசிக்கிட்டிருக்கீங்க. இப்போ உலகின் மிக இளமையான ‘கிராண்ட் மாஸ்டர்’னு செஸ்ல பெயர் வாங்கியிருக்கான் இந்த சென்னை மாணவன். அதிபன், அவன் உன்னைவிட சின்னப்பையன்டா. பன்னிரண்டு வயது பத்து மாசம் பதிமூன்று நாள் ஆகி 23.06.2018இல் இந்த சாதனையை எட்டிப் பிடிச்சிருக்காப்ல” என்றாள் அவர்களின் அம்மா மலர்விழி.

“அம்மா.. கம்பேர் பண்ணக் கூடாதுன்னு சொல்வீங்களே...” என்றாள் நிலா.

அப்போது அப்பா எழில்செல்வன் குறுக்கிட்டார். “அம்மா கம்பேர் பண்ணல நிலா. அவங்க ஒரு செய்தியை இணைச்சு நினைவில் நிற்க உதவி செய்யறாங்க. இப்பிடிச் செய்றதன் மூலமா நாம, ஒன்னுக்கொண்ணு தொடர்புள்ள தகவல்களை மனசுக்குள்ள நெருங்கிய தகவல் சங்கிலியா வைச்சுக்கலாம். தேவைப்படும்போது, சுலபமா நினைவிற்குக் கொண்டு வரலாம்.



உதாரணமா, இப்போ இருக்கிற செஸ் உலக சாம்பியன் மேக்னஸ் கார்ல்ஸன், பதின்மூன்று வயசுக்கு மேலதான் கிராண்ட் மாஸ்டர் ஆனார். அப்படீன்னா பாத்துக்கோ. பிரக், பிரக்னு ஃப்ரெண்ட்ஸ் எல்லாம் கூப்பிடுறாங்களே... அந்த பிரக்ஞானந்தாப் பையன் எதிர்காலத்துல எவ்வளவோ சாதனைகள் செய்யப்போறான்”

என்று எழில்செல்வன் விளக்கினார். நிலாவுக்கு உற்சாகமாகிவிட்டது. கையில் இருந்த திருக்குறள் புத்தகத்துக்கு இடையில் ஒரு விரலை வைத்திருந்தாள்.

“ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா ஊக்கம் உடையான் உழை” என்று ஊக்கம் உடைமை அதிகாரத்துல திருவள்ளுவர் சொன்ன மாதிரி, இந்த அண்ணன் ஒரு நாளைக்கு எட்டு மணி நேரத்துக்கும் மேல் செஸ் பயிற்சி மேற்கொள்வாராம். நான்கூட எதையாவது செய்ய ஆரம்பிக்கிறேன். கொஞ்சம் போனாலும் விட்டுடறேன். இனிமேல ‘அசைவிலா’ன்னு வள்ளுவர் சொல்றா மாதிரி, தொடர் முயற்சியைச் செய்யப்போறேன்” என்றாள் நிலா.

“ரொம்ப நல்லது. பிரக்கோட கோச் R.B. ரமேஷ் மாதிரி உனக்கும் ஒரு பயிற்சியாளர் அமைய வாழ்த்துகள்” என்று சிரித்தாள் மலர்விழி.

– ஆனந்த்